காலாண்டுப் பொதுத் தேர்வு (செப்டம்பர்-2017)

வகுப்பு - 12.

தமிழ் இரண்டாம் தாள்

I எவையேனும் மூன்றனுக்கு (4 மதிப்பெண்)

1. நாடகத்தமிழின் சிறப்பியல்புகள்

1. படிக்க அவகாசம் இல்லாத வேலைக்காரர்களுக்கும், படிக்க தெரியாதவர்களுக்கும் நல்லறிவு புகட்டும் நோக்கம்.

2. கேட்பவர்க்கும், காண்பவர்க்கும் இன்பம் தருவது.

3. உள்ளதை உள்ளவாறே காட்டுவது.

4. நாடகத்தமிழ் = இயற்றமிழ் + இசைத்தமிழ்

5. கேள்வி இன்பம், காட்சி இன்பம் தருகின்றது.

2. நீண்ட காலமாக நடந்துவரும் பெருந்தொலை:

1. பெரியோர் அறிவுறுத்திய கொள்கைகளைப் புதைத்து உருவத்திற்கு வந்தனை செய்தல்.

2. சாத்திரம் பல பேசும் சழக்கர்களால் கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்.

3. சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்

4. பெரியோர் அறிவுறுத்திய நெறி நின்று ஒழுகுவதே உண்மையில் வழிபாடாகும்.

3. கிட்ஸ்

1. 'கால்வாய் இல்லாத இடத்தில் பெய்த ஒளி மழையே' கவிதை.

2. ஆற்றலின் சிகரம்.

3. ஆற்றல் தனது வலப்புயத்தில் தலை சாய்த்துப் பாதி உறங்கிக் கொண்டிருக்கும் நிலை.

ஜான் ரஸ்கின் :-

சீரிய உணர்ச்சிக்குரிய காரணங்களைப் பாவனா சக்தியால் குறிப்பிடுவதே கவிதை.

9. மக்கள் நாகரிகத்தோடு மாட்டிற்கும் தொடர்புண்டு :-

1. மக்கள் நாகரிகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்கு நிலைகள்.

2. குறிஞ்சியிலேயே ஆத்தொடர்பு இருந்திருத்தல் வேண்டும்.

3. முல்லை நிலத்திலிருந்த ஆயர், ஆட்டையும், மாட்டையும் பெருவாரியாக வளர்த்தனர்.

4. ஆவை மேய்ப்பவர் ஆயர்.

10. திறவுடைய இளைஞர்க்கும் மாடு உவமை

1. காளை மக்களுக்கு உழைத்தலால் 'மாடு போல் உழைத்தல்'.

2. காளை, விடலை என்னும் பெயர்கள் மறவர்க்கும் குறும்பரசர்க்கும் உவமை.

3. எடுத்த காரியத்தை முடிக்கும் திறன் உடையவன் பகடு.

4. ஆண்மையாக உழைக்கும் ஆடவனுக்கு காளை மாட்டினை உவமையாகத் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

5. இளைஞரின் வலிமையை அறிவதற்கு ஏறுதழுவுதல் போட்டி.

III ஏதேனும் ஒன்றனுக்கு (6 மதிப்பெண்)

11. இயற்றமிழ்

12. ஒற்றுமை உணர்வு :

1. ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர் போலவே உயர்ந்த அன்பு வாழ்க்கை வாழ்ந்தனர்.

2. ஒற்றுமை உணர்வு

3. "யாதும் ஊரே யாவரும் கேளிர்"

4. நிலையான தொழில்களாலும், கலையாத உறவின் முறைகளாலும் கவலையின்றி மனஒற்றுமையாய் மகிழ்ந்து வாழ்ந்திருந்தனர்.

தமிழரின் கொள்கை :-

1. தொழில் செய்து பொருள் தேடும் கொள்கை உடையவர்கள்.

பவணந்தி முனிவர்

பலவகைத் தாதுக்களால், உயிருக்கு இடமாய் இயற்றப்பட்ட உடம்பு போல, நால்வகைச் சொற்களால் பொருளுக்கு இடமாய் வல்லவர் அணி பெற இயற்றுவது கவிதை.

4. நாடு என்னும் பற்றால் சமரசத்தை இழத்தல்

1. நாட்டுப் பற்றால் பிற நாட்டிற்கு துன்பம் இழைக்கிறான்.

2. பிற நாட்டை வருத்துவதற்காக ஆகாயவிமானம், நீர் மூழ்கிகளும், நச்சுக் காற்று

3. மற்ற நாட்டாரிடமும் கடவுளிருத்தல் புலனாவதில்லை.

4. எல்லா நாட்டாரும் சகோதரர் என்பதை உணராமல் பலர் நாடு என்னும் பற்றால் சமரசத்தை இழத்தல்.

5. இசைத் தமிழ் :- பண் + தாளம்

பண்ணொடு கலந்தும் தாளத்தோடு கூடியும் இயங்கும் செந்தமிழ்ப் பாட்டுக்களாலும் கொடுந்தமிழ்ப் பாட்டுக்களாலும் கொடுந்தமிழ்ப் பாட்டுக்களாலும் இயன்ற இலக்கியங்களும் அவற்றின் இலக்கணங்களும்.

இசைத்தமிழ் நூல்கள் :-

1. கீர்த்தனைகள்
2. வரிப்பாட்டுகள்
3. சிந்து
4. ஆனந்தக் களிப்பு
5. கும்மி
6. தெம்மாங்கு

முற்காலத்து நூல்கள் :- பெருநாரை, பெருங்குருகு, இசைநுணுக்கம், தாளவகையோத்து.

இடைக்காலத்து நூல் : தேவாரம்

இக்காலத்து நூல்கள் : கந்தபுராணக் கீர்த்தனை, பெரியபுராணக் கீர்த்தனை, சங்கீத சந்திரிகை.

II எவையேனும் மூன்றனுக்கு (4 மதிப்பெண்) 5

6. நம் முன்னோர் நனிநாகரிகராய் விளங்கிய பாண்மை

1. தம்மொடு பழகியவர்கள் தமக்கு நஞ்சு ஊட்டினும் நம்மவர்கள் என்னும் கண்ணோட்டத்தால் அதனை மறுக்காமல் பருகினர்.

2. "முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்" - நற்றிணை

3. அவர்கள் உள்ள மாட்சிமை மிகவும் பெரிது.

4. தம்மைப் போன்ற மக்களிடத்தில் உயிர்நேயம் இல்லாதவரை நாகரிகர் என்று சொல்ல வழியில்லை.

7. எளிய முயற்சி

வயலில் தன் வளையின் பக்கத்திலேயே விளைந்து கிடக்கும் நெற்பயிரை எலி தன் வளைக்குள் சேர்த்துக் கொள்ளும். அதைப்போன்ற எளிய முயற்சியை நம் முன்னோர் அருவருத்தனர்.

பெரிய முயற்சி :-

இடப்பக்கத்தில் வீழ்ந்து கிடக்கும் பன்றியைக் கண்ணெடுத்துப் பாராமல், மறுநாள் ஒரு பெரிய யானையை வலப்பக்கம் வீழ்த்தி உணவாகக் கொள்ளும் இயல்புடையது புலி. அதனைப் போன்ற பெரு முயற்சியை நம் முன்னோர் மதித்தனர்.

8. அறமுறை வாழ்த்து

1. மக்களால் வாழ்த்தப்படும் பொருட்களுள் ஆவும் ஒன்று.

2. "முனிவரும் பார்ப்பாரும் ஆனிரையும் மழையும் முடியுடை வேந்தரும் உலகும்" என நச்சினார்க்கினியர் உரைத்தார்.

3. மக்கள் நல்வாழ்வு பெற, ஆவும் ஒரு காரணம் என்பதால் தமிழர் அதனை வாழ்த்தினர்.

4. "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என்பது ஞானசம்பந்தரின் வாக்கு.

2. இரத்தலை அழிவாகக் கருதினார்.

3. ஆவுக்கு நீர் வேண்டுமென்று இரப்பதனையும் இழிவாய்க் கருதினார்.

4. உளனமுற்றோர், பணியாளர், பிறரிடம் பொருள் எதிர்பார்ப்பது ஒரு வகையால் பொருந்தும்

IV 13. பால்வண்ணம் பிள்ளை

ஆசிரியர் – புதுமைப் பித்தன்

கதைக்கரு :-

ஆணவம் அழிவிற்கு இட்டுச் செல்லும், பால்வண்ணம் பிள்ளையின் பிடிவாத குணம் – குடும்பத்தில் பட்ஜெட் பிரச்சனை – மெக்ஸிகோ பிரச்சனை – கன்றுடன் மாடு வாங்குதல் – மாடு விற்பனை.

(அல்லது)

சட்டை

ஆசிரியர் – ஜெயகாந்தன்

கதைக்கரு : பிறருக்காக வாழும் வாழும் வாழ்வே துறவு

பூந்தோட்ட சாமியாரின் மனக்குடிப்பம் – சாமியாரின் உழைப்பும் உள்ளமும் - இராணுவச் செய்தி – நாட்டுப்பற்று – கீதை உபந்நியாசம் – சாமியார் இராணுவ வீரர் ஆதல்.

(அல்லது)

நாடகமாக்கல்

நாடக அமைப்பு – (5 மதிப்பெண்கள்)

நாடக வடிவில் உரையாடல் எழுதுதல் – (5 மதிப்பெண்கள்.)

வேலி

ஆசிரியர் இராஜம் கிருஷ்ணன்

சாதி மறுப்புத் திருமணம் – மாலதி அலுவலகத் திலிருந்து வருதல் – மாமியார் கோமதி பக்கத்து வீட்டு மங்களத்தம்மாளுடன் உரையாடல் –

வீட்டு நிகழ்ச்சிகள் - அக்கா, அத்தான் வருகை - மாலதியிடம் மாமியார் கரிசனம் - மாமியாரின் செயல்பாடுகள் - சம்பளம் பற்றி விசாரிப்பு - பணத்திற்கு முன்னும் இல்லை, வேலையும் இல்லை.

14. கதைமாந்தர் திறனாய்வு :

முன்னுரை, முடிவுரை, மனம் கவர்ந்த கதை மாந்தர் - 3 மதிப்பெண்கள்

கதை மாந்தர் பண்புகள் உட்தலைப்புகளிட்டு விளக்குதல் - 7 மதிப்பெண்கள்

மகன்

ஆசிரியர் — ஜெயப்பிரகாசம்

பண்ணைப்புரம் - அன்னக்காமுவின் மரணம் - மகனின் செயல் - கதாசிரியரின் நினைவோட்டம் - சாமியாரப்பனின் செயல் - சடங்குகள் - வெள்ளிக்குடம் உடைத்தல்.

(அல்லது)

கற்பனைக் கதை

தலைப்பு, கதைத்தொடக்கம் - 2 மதிப்பெண்கள்

கருப்பொருள் வளர்ச்சி - 3 மதிப்பெண்கள்

கற்பனைத் திறன் - 4 மதிப்பெண்கள்

கதை முடிவு - 1 மதிப்பெண்

(அல்லது)

பால்வண்ணம் பிள்ளை

ஆசிரியர் - புதுமைப்பித்தன்

வீட்டிலே புலி - வெளியிலே பசு - பொறுப்பற்ற குடும்பத்தலைவர் - வீணான பிடிவாதக்காரர் - சினத்தால் அறிவிழப்பவர் - வீட்டையே வெறுப்பவர் - குடும்ப நலம் கருதாதவர்

முன்னுரை, முடிவுரை, பாடல்தலைப்பு - 2 மதிப்பெண்கள்
திரண்ட கருத்து, மையக் கருத்து - 3 மதிப்பெண்கள்
எதுகை, மோனை, இயைபு, முரண் - 2 மதிப்பெண்கள்
சந்தம், சுவை, அணி, கற்பனை, உவமை
உருவக நயங்கள், சொல், பொருள்
நயங்கள் - 3 மதிப்பெண்கள்
(ஏதேனும் மூன்று நயங்கள் இருப்பின்)
அணி - இயல்பு நவிற்சி அணி
சுவை - அவலம்
பாவகை / சந்தம் - அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
ஓசை - அகவல்

VI ஏதேனும் மூன்றனுக்கு தமிழாக்கம் (2 மதிப்பெ

16. சிறுதுளி பெருவெள்ளம்.
17. கல்வி கரையில கற்பவர் நாள் சில
18. தவறு செய்வது மனிதப் பண்பு
19. காந்தி பிரிட்டிஷ்களுக்கு எதிரான வன்முறைக்கு போராடினார்.
20. நல்லோர்க்கு உலகம் நல்லதாகவே தோன்றும்
21. நெருப்பில்லாமல் புகையாது.
22. அ) தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்.
ஆ) மனம் இருந்தால் மார்க்கம் உண்டு
இ) தன் கையே தனக்குதவி.
பழமொழி விளக்கம் - 1 மதிப்பெண்
ஏற்புடைய வாழ்க்கை நிகழ்வு, கதைநிகழ்வு - 3 மதிப்பெண்கள்

23. ஐப்பசி மாதம் அடைமழை என்பார்கள்.
24. வேட்டுவப் பெண்கள் விளையாடப் போவதுண்டு என்று சஞ்சீவிப் பர்வதச் சாரல் பாடுகிறது.